# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 091 | செவ்வாய்க்கிழமை Tuesday | 30.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# தவெகவினர் உள்பட அரசியல் தலையீடு இன்றி காவல்துறை செயல்பட வேண்டும்

## முதலமைச்சர் விஜய் அறிவுரை



முதல்-அமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சி அமைந்து ஒரு மாதம் கடந்துள்ள நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில்மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாடு இன்று தொடங்கியது. தலைமை செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அனைத்து துறை செயலாளர்கள், மாவட்ட கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள், சரக டி.ஐ.ஜி.க்கள், ஐ.ஜி.க்கள், வனத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.மாநாட்டுக்கு வந்த அனைவரையும் தலைமைச் செயலாளர் சாய்குமார் வரவேற்று பேசினார். அதைத் தொடர்ந்து முதல்-அமைச்சர் விஜய் தொடக்க உரையாற்றினார். தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கை பராமரிப்பது குறித்தும், பெண்கள் பாதுகாப்பு, போதைப் பொருளை ஒழிப்பது சம்பந்தமாகவும் விரிவாக பேசினார். அதைத்தொடர்ந்து உயர் அதிகாரிகள் பேசினார்கள். இந்த மாநாட்டை 3 அமர்வுகளாக நடத்த முதல்-அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். அதன்படிமுதல்அமர்வில் கலெக்டர்கள், போலீஸ் அதிகாரிகள் இணைந்து கலந்து கொண்டனர். இந்த அமர்வில் சட்டம்-ஒழுங்கு பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பெண்களுக்கு எதிராக நடக்கும் நகை பறிப்பு, பாலியல் அத்துமீறல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் போலீஸ் நிர்வாகத்தின்செயல்பாடுகள் அவர்களின் பொறு ப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் குற்றத்தில் ஈடுபடுவோரை கைது செய்வது, ரவுடிகள் செயல்பாட்டை கண்காணித்தல், ஜாமீனில் உள்ளவர்களை கண்காணித்தல், உளவுத்துறை யின் பணிகள் குறித்து ஆய்வு நடந்தது.

சட்டம்-ஒழுங்கு நிலவரம்

சிங்கப் பெண் அதிரடிப் படையின் செயல்பாடுகள், போக்சோ வழக்குகளின் நிலை, பெண்கள் பாதுகாப்பு குழந்தைகளுக்குஎதிரானசைபர்குற்றங்கள் குறித்தும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. போதைப் பொருள் இல்லாத தமிழகம் என்ற நிலையை உருவாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

கல்வி நிறுவன ங்களில் போதை ப்பொருட்களுக்கு எதிராக விழிப்பு ணர்வு ஏற்படுத்துவது, கள்ளச் சாராயத்தை கடுமையாக ஒழிப்பது, தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனைக்கு எதிரான நடவடிக்கைகள் ஆகியவை உள்பட பல்வேறு சட்டம்-ஒழுங்குநிலவரம் பற்றியும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த மாநாட்டில் காவல்துறைக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை முதல் அமைச்சர் விஜய் விடுத்துள்ளார். முதல் அமைச்சர் விஜய் கூறுகையில்,பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுக்க கவனம் செலுத்த வேண்டும். கட்சிக்காரர்கள் என முக்கியத்துவம் கொடுக்காமல் பொதுமக்களுக்கான அரசாக இருக்க வேண்டும். கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புகள் போன்று இனி நடைபெறாமலிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். தவெகவினர் உட்பட அரசியல் தலையீடின்றி காவல் துறை செயல்பட வேண்டும். அரசு திட்டங்களை முழுமையாக அமல்படுத்த வேண்டும்" என்று விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

# "ரீல்ஸ் ஆட்சிக்கு மக்களே பாடம் புகட்டுவார்கள்" தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை: "டேக் டைவர்ஷன்... டேக் டைவர்ஷன்" என ஓடும் இந்த ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவார்கள் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தனது சமுக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளபதிவில்,"போதைப் பொருள் பயன்படுத்தியது போல், "Thug Life" Story போட்ட அமைச்சருக்குஎதிராகப்போராட்டம் செய்த திமுக-வினர் கைது.

தவெக ஆட்சியை விமர்சிப்பதால், முன்னாள் அமைச்சர் சிவசங்கர் மீது வழக்கு பதிவு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீட்டில் ரெய்டு. இப்படி விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை மிரட்டியும், ஊடகங்களுக்கு பதில் அளிக்காமலும் கட்டமைக்கப்பட்ட,தன் போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல்வரின் எண்ணம் நீண்டகாலம் நீடிக்காது. அதிகாரத்தை வைத்து ஆட்டம் போடுபவர்களின் அகங்காரம் அடங்கும்."டேக் டைவர்ஷன்... டேக்டைவர்ஷன்" என ஓடும் இந்த ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவார்கள்" என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

த.வெ.க. அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள மனிதவள மேலாண்மைத் துறைஅமைச்சர் டி.சரத்குமார், பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்துவது போன்ற வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாக பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த வீடியோ குறித்து விளக்கமளித்த அமைச்சர் டி.சரத்குமார், தனது குழந்தைக்கு மாத்திரையை பொடியாக்கி கொடுத்ததாகவும், தவறான தகவல்களை பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

இருப்பினும், இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து, அமைச்சர் டி.சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி தி.மு.க. மாணவர் அணி சார்பில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் சென்னை எழும்பூரில் இன்று தி.மு.க. மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டத்திற்கான மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்களை தடுத்துநிறுத்தியபோலீசார், ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு உரிய அனுமதி பெறாததால் மேடை அமைக்க அனுமதிக்க முடியாது என கூறினர்.

கைது

இதையடுத்து தி.மு.க. மாணவர் அணி நிர்வாகிகளுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை போலீசார் கைது செய்து காவல்துறை வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.

இந்நிலையில், விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை த.வெ.க. அரசு மிரட்டுகிறது எனதி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டு ள்ளதாவது;-

"போதைப் பொருள் பயன்படுத்தியது போல், "Thug Life" Story போட்ட அமைச்சருக்கு எதிராகப் போராட்டம் செய்த தி.மு.க.வினர் கைது! த.வெ.க. ஆட்சியை விமர்சிப்பதால், முன்னாள் அமைச்சர் சிவசங்கர் மீது வழக்கு! முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு வீட்டில் ரெய்டு!


நீண்டகாலம்நீடிக்காது

இப்படி விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளை மிரட்டியும், ஊடகங்களுக்கு பதில் அளிக்காமலும் கட்டமைக்கப்பட்ட, தன் போலி பிம்பத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் முதல்-அமைச்சரின் எண்ணம் நீண்டகாலம் நீடிக்காது!

அதிகாரத்தை வைத்து ஆட்டம் போடுபவர்களின் அகங்காரம் அடங்கும்! "டேக் டைவர்ஷன்... டேக் டைவர்ஷன்" என ஓடும் இந்த ரீல்ஸ் ஆட்சிக்கு, மக்களே பாடம் புகட்டுவார்கள்!"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM


| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர்

சென்னை:கரூர்தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்தார் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர். அவர் அளித்த ராஜிநாமா கடிதத்தை ஏற்றுக் கொண்டதாக சபாநாயகர் ஜே.சி.டி. பிரபாகர் அறிவித்துள்ளார்.

இது குறித்து சபாநாயகர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "சட்டமன்றப் பேரவை விதி 21-ன் படி கரூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தனது பதவி விலகல் கடிதத்தை தம் கைப்பட எழுதி என்னிடம் அளித்துள்ளார். அவர் அளித்த பதவி விலகல் கடிதம் சட்டமன்றப் பேரவை விதி 22-ன் படி முறையாக உள்ளதால் அதனை நான் ஏற்றுக் கொள்கிறேன்" எனகூறப்பட்டுள்ளது.



இதே போல் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), எஸ். ஜெயக்குமார் (பெருந்துறை) பி. சத்யபாமா (தாராபுரம்) ஆகியோர் கடந்த மே 25-ந்தேதி எம்எல்ஏக்கள் பதவியை ராஜிநாமா செய்து விட்டு தவெகவில் இணைந்தனர். மேலும்,அம்பாசமுத்திரம் தொகுதியில்வெற்றிபெற்ற இசக்கி சுப்பையா, மே 26-ந் தேதி எம்எல்ஏ பதவியை ராஜிமாநா செய்து விட்டு தவெகவில் இணைந்தார்.

மேலும், எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான அதிருப்தி அணியில் இருந்தவரும், விராலிமலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற வருமான முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் ஜூன் 16-ந் தேதி எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்தார்.

இந்த நிலையில், கரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அதிமுக எம்எல்ஏ எம்.ஆர். விஜயபாஸ்கர் தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

இதனையடுத்து சட்டப் பேரவையில் அதிமுக எம்எல்ஏக்களின் பலம் 41 ஆக குறைந்துள்ளது.

இதே போல் சட்டப் பேரவையில் காலியாக உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது. தவெகவில் இணையப் போகிறாரா?

ஏற்கனவே சி விஜயபாஸ்கர் ராஜிநாமா செய்திருந்த நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணையுள்ளதாக தகவல் வெளியானது. ஆனால் தற்போது வரை அவர் தமிழக வெற்றி கழகத்தில் இணையவில்லை. இதே போல் எம்.ஆர். விஜயபாஸ்கர் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்துள்ள நிலையில், அவரும் தமிழக வெற்றி கழகத்தில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆகியோர் ஒன்றாக சென்று தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய உள்ளதாககூறப்படுகிறது.


செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

### செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே

# முதலமைச்சர் விஜய் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

## அமைச்சர் தென்னரசு பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே மாரிபுத்தூர் பகுதியில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாள் விழா வெகு விமர்சையாக. மாவட்டத் தலைவர் எம் எஸ் பாலாஜி தலைமையில் அருங்குணம் ஊராட்சி மன்றத் தலைவர்யோகேஷ்பாபு.நிச்சயமே ஜமீன் எண்டத்தூர் தலைவர் பூபாலன் ஒருங்கிணைப்பில் கொண்டாடப்பட்டது இதில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர் கலந்து கொண்ட அனைவருக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது இதில் சிறப்பு விருந்தினராககலந்துகொண்ட வெளிநாடு வாழ் மக்கள் நலத்துறை அமைச்சர் தென்னரசு சிறப்புரையாற்றினார் இதில் அவர் பேசியது எங்களைப் பார்த்து மக்கள் வாக்கு செலுத்தவில்லை எங்கள் தளபதி முகத்தை பார்த்து வாக்கு செலுத்தினர் இங்கு முதலமைச்சரையே தோற்கடித்தது எங்க தளபதி முகம் ஒவ்வொரு கிராமத்திலும் தளபதியின் சிங்கப்பெண்கள் கூட்டம் உள்ளது இது மக்களுக்கான ஆட்சி உங்களுக்கான ஆட்சி என பேசினார் இந்த நிகழ்ச்சியில் பேச்சாளர் லயோலா மணி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்மரகதம்குமரவேல் மற்றும்கட்சிநிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்

### கோவை ஜி.வி. ரெசிடென்சி அருகில்

# வி ஸ்மைல் டென்டல் ஸ்டுடியோ எனும் பல் மருத்துமனையின் துவக்கவிழா நிகழ்ச்சி

## அமைச்சர் சம்பத்குமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்

கோவை ஜி வி ரெசிடென்சி அருகில் வி ஸ்மைல் டென்டல் ஸ்டுடியோ எனும் பல் மருத்துமனையின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட பொருப்பாளரும், தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சம்பத்குமார் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.



கோவை ஜி வி ரெசிடென்சி அருகில் வி ஸ்மைல்டென்டல்ஸ்டுடியோ எனும் பல் மருத்துமனையின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்தநிகழ்ச்சியில்சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட பொருப்பாளரும், தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சம்பத்குமார் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து இப்பல் மருத்துவமனையில் நிறுவபட்டுள்ள அதிநவீன கருவிகளை பார்வையிட்டுஅதன்செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய பல் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் வினோதா, கூறியதாவது..

தற்போது வளர்ந்து வருகின்ற நவீன தொழில்நுட்பங்களை கொண்டு உருவாக்கபட்டுள்ள அதிநவீன கருவிகளுடன் இயங்கக்கூடிய, இப்பல் மருத்துவமனை தற்பொழுதைய கால சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டி.ஓ இம்ப்ளானட் நிறுவனத்தின் ரே பேஸ் ஸ்கேன் எனும் இயந்திரம் முதல்முறையாக இந்தியாவில் தனியார் பல் மருத்துவமனை என்றால் அது இங்கு தான் நிறுவப்பட்டுள்ளது. இந்த இயந்திரம் முழுக்க முழுக்க ஏஐ தொழில்நுட்பத்துடன், இணைக்க பட்டு நமது முகங்களை ஸ்கேன் செய்வதுடன் நம் பற்களுக்கு எந்தமாதிரியான சிகிச்சைகளை வழங்க வேண்டும் என்று தெரிவித்து விடும், பின்னர் பற்களுக்கு தேவையான சிகிச்சை முறைகளை மருத்துவர்கள் அளிக்கலாம் என்றார். கூடுதலாக இங்கு ஸ்பேஸ் ஸ்கேனர் கருவிகள், சி.பி. சி.டி கருவிகள் என அதிநவீன கருவிகளுடன் இப்பல்மருத்துவமனை செயல்படுகின்றது என்றார். இந்த மருத்துவமனை துவக்கவிழா நிகழ்ச்சியில் மருத்துவர் ஆஷிக், டி. ஓ இம்ப்ளாணட் நிறுவனத்தின் விற்பனை இயக்குனர் சங்கர், விற்பனை மேளாளர் கண்ணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பி டத்தக்கது.

### உளுந்தூர்பேட்டை அருகே

# சொத்து தகராறில் தந்தையை இரும்புக் கம்பியால் தாக்கி கொலை செய்த மகனை போலீசார் கைது செய்தனர்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கொனலவாடி கிராமத்தைச் சேர்ந்த 71 வயதானராமசாமி,குடும்பத் தகராறு காரணமாக தனது மனைவியுடன் தனியாக வசித்து வந்தார். அவருக்குச் சொந்தமான 9 சென்ட் வீட்டுமனையை விற்க முடிவு செய்திருந்த நிலையில், அந்த இடத்தை தனக்கே விற்குமாறு இளைய மகன் கலியமூர்த்தி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், அந்த இடத்தில் மகன் சிமெண்ட் சீட்கொட்டகைஅமைத்திருந்தார். நேற்று காலை, கொட்டகையை அகற்ற ராமசாமி சென்றபோது, தந்தை-மகன் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றியதில், ஆத்திரமடைந்த கலியமூர்த்தி அருகில் இருந்த இரும்புக் கம்பியால் தந்தையின் தலையில் தாக்கியதாக கூறப்படுகிறது.

பலத்த காயமடைந்த ராமசாமி உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த உளுந்தூர்பேட்டை போலீசார், கலியமூர்த்தியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளனர். சொத்து தகராறு கொலையில் முடிந்த இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியான நிலையில், அமைச்சரவையில் இருந்து சரத்குமாரை நீக்கக்கோரி, திமுக மாவட்ட மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்.. கள்ளக்குறிச்சி கச்சேரி சாலையில் உள்ள அம்பேத்கர் சிலை அருகே அனுமதியின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 300க்கும் மேற்பட்ட திமுக மாவட்ட மாணவரணியினர் கைது..பேருந்து சக்கரத்தில் படுத்துக்கொண்டும், சாலையில் அமர்ந்தபடியும் அட்ராசிட்டி செய்தவர்களை போலீசார் கையைப் பிடித்து இழுத்தும், குண்டுகட்டாகத் தூக்கியும் கைது செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# திட்டக்குடி அரசு மருத்துவமனையில் முதன்முறையாக சிறுவனின் மூக்கில் சிக்கிய பட்டன் பேட்டரி அகற்றம்



பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 4 வயது சிறுவன் மித்ரன், கடந்த ஒரு வாரமாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில்சிகிச்சைபெற்று வந்த நிலையில்,மேல்சிகிச்சைக்காக திட்டக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். மருத்துவ பரிசோதனையின் போது சிறுவனின் வலது மூக்கில் இருந்து சீழ்வடிவது கண்டறியப்பட்டதால், மேற்கொள்ளப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில் மூக்கின் உள்ளே அடையாளம் காணப்படாத பொருள் ஒன்று இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, கடலூர் மாவட்ட இணை இயக்குநர் டாக்டர் பிரமிளாவின் அறிவுறுத்தலின்பேரில், தலைமை மருத்துவ அலுவலர்டாக்டர்சேபானந்தம் மேற்பார்வையில், திட்டக்குடி அரசு மருத்துவமனை காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் பாலமுருகன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர்.

முழு மயக்க மருந்து அளிக்கப்பட்ட நிலையில், மயக்கமருந்து நிபுணர் டாக்டர் அறிவுச்செல்வன், டாக்டர் சிவசங்கரி, குழந்தைகள் நல மருத்துவர் டாக்டர் சத்யா, அறுவை அரங்கு செவிலியர் லட்சுமி மற்றும் பெண் செவிலியர் உதவியாளர் ஆனந்த ஜோதி உள்ளிட்டோர் இணைந்து எண்டோஸ்கோபி முறையில் பரிசோதனை மேற்கொண்டனர். அப்போது சிறுவனின் வலது மூக்கில் சிக்கியிருந்த பட்டன் பேட்டரி கண்டறியப்பட்டு வெற்றிகரமாக அகற்றப்பட்டது.

திட்டக்குடி அரசு மருத்துவமனையில் முதன்முறையாக முழு மயக்க மருந்து அளித்து எண்டோஸ்கோபி முறையில் மூக்கில் சிக்கிய பட்டன் பேட்டரி அகற்றப்பட்ட இந்தச் சாதனை, பொதுமக்களிடையே வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

### தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப்பள்ளியில்

# மாணவர்களின் பார்வையை பாதுகாக்க பள்ளிக்கே வந்த இலவச கண் கண்ணாடிகள்



மாணவர்களின் கண் பார்வை குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய சிகிச்சை மற்றும் தேவையான உதவிகளை வழங்கும் நோக்கில் தமிழக அரசு செயல்படுத்தி வரும் 'கண்ணொளி காப்போம்' திட்டத்தின்கீழ்,சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் பள்ளிக்கே வந்து வழங்கப்பட்டன. பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்டு, பார்வைக் குறைபாடு உள்ளவர்களை கண்டறிந்து, அவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் தொடர்ந்து சிறப்பாகப் பயிலும் வகையில் தமிழக அரசு சார்பில் இலவச கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்ட கண் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கண்ணங்குடி வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலைய அரசு மருத்துவர் டாக்டர் கெவின் ஆபிரகாம் மற்றும் திருவேகம்பத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கண் நிபுணர் மகேஸ்வரி ஆகியோர் மாணவர்களுக்கு இலவச கண் கண்ணாடிகளை வழங்கி, கண் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில், மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க நல்ல பார்வைத்திறன் மிகவும் அவசியம் என்றும், அரசின் இத்தகைய மக்கள் நலத் திட்டங்கள் மாணவர்களின் எதிர்காலத்திற்கு பெரும் துணையாக அமைகின்றன என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆசிரியர் ஸ்ரீதர் சிறப்பாக செய்திருந்தார். ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சுகாதாரத் துறை பணியாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

# தொடர் விடுமுறை முடிந்து சென்னை திரும்பிய மக்களால் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது



தமிழகத்தில் மொகரம் பண்டிகை மற்றும் வார விடுமுறை என தொடர்ந்து மூன்று நாட்கள் விடுமுறைகள் விடப்பட்டன, இந்த நிலையில் சென்னையில் தங்கி உள்ள தென் மாவட்டங்களைச் சேர்ந்தமக்கள்சொந்தஊருக்குசென்றுவிடுமுறையை கழித்தனர் பிறகு விடுமுறை முடிந்து இன்று மீண்டும் சென்னைக்கு திரும்பி உள்ளனர்

கார் வேன் பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்களில் சென்னைக்கு செல்வதால் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது,இதில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் ஒரே நேரத்தில் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடிக்கு வருவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது இதனால் திருச்சி சென்னை ஜிஎஸ்டி சாலையில் நீண்ட தூரம் வாகனங்கள் அணிவகுத்து நின்று சுங்கச்சாவடியை ஊர்ந்து சென்று கடந்து செல்கின்றன,போக்குவரத்துநெரிசலைதவிர்ப்பதற்கு சுங்கச்சாவடி நிர்வாகம் தரப்பில் எதிர் திசையில் உள்ள ஒரு வழித்தடத்தில் சென்னைக்கு செல்லும் வாகனங்கள் செல்லும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டு அதில் வாகனங்கள் செல்கின்றன தொடர்ந்து சுங்கச்சாவடியில் வாகனங்களை ஒழுங்குபடுத்தி வருவதோடு எவ்வித அசம்பாவிதம் நடைபெறாமல்இருக்கபாதுகாப்புபணியில்போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

# முல்லைப் பெரியாறு அணைக்கு பதில் புதிய அணை?



முல்லைப் பெரியாறு அணை குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கேரளா நீர்வளத்துறை அமைச்சர் மான்ஸ் ஜோசப், கேரளாவில் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்ததும்,,,

முல்லைப் பெரியாறு அணைக்கு மாற்றாக புதிய அணை கட்டுவது தொடர்பாக கேரள மாநில முதல்வர் வி.டி. சதீஷன் தலைமையில் தமிழக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறார். கூடுதலாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திருராகுல் காந்தி முன்னிலையில் அந்த பேச்சுவார்த்தை நடக்க இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

புதிய அணை கட்டுவதோடு அதன் மூலமாக தமிழகத்திற்கு கூடுதல் தண்ணீர் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்வோம் என்றும் போகிற போக்கில் சொல்லி இருக்கிறார்.

இந்த முடிவுக்கு எதிராகதமிழகத்தில் உள்ள சோறு சாப்பிடும்விவசாய சங்கங்கள் போராடலாம்என்றும் கவலை தெரிவித்திருக்கும் கேரள நீர்வளத்துறை அமைச்சர் எல்லாக் காலமும் அச்சத்துடனே 50 லட்சம் மக்கள் வாழ்வதற்கு அனுமதிக்க முடியாது என்றும் கூறியிருக்கிறார்.

தமிழக அரசு தெளிவான முடிவை இதுகுறித்து அறிவிக்க வேண்டும் முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் இந்த ராகுல் காந்தி அல்ல எந்த ராகுல் காந்தி வந்தாலும் பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பே கிடையாது.

இதற்கிடையே உச்ச நீதிமன்றத்தில் பல வழக்குகள் நிலுவையில் இருந்தாலும் அதை தாண்டி இரண்டு மாநில அரசுகளும் பேசி இதில் ஒரு நல்ல முடிவை எட்ட வேண்டும் என்று கேரள நீர்வளத்துறை அமைச்சர் சொல்லி இருப்பது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

நிலைமை சீரடைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் நிலைமை சீரடையாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதத்தை லோயர் கேம்ப் ல் உள்ள மாமனிதர் பென்னிகுயிக் மணிமண்டபத்திற்கு முன்பாக தொடங்குவோம்.

கம்பம் உபகோட்டத்தில் பணிபுரியும் பொறுப்பற்ற அதிகாரிகளின் போக்கால் முல்லைப் பெரியாறு அணை இன்னும் பல சீரழிவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கிறேன் போர்க்கால அடிப்படையில் செயற்பொறியாளர் எஸ்டிஒ இளம்பொறியாளர் உதவி செயற் பொறியாளர்கள் உள்ளிட்ட அத்தனை பேரையும் கூண்டோடு மாற்றிவிட்டு பொறுப்பான அதிகாரிகளை நியமிக்காவிட்டால் அடுத்த கட்டத்திற்குசெல்வதற்குவாய்ப்புஇருக்கிறது.மேலாக தமிழக அமைச்சரவையில் அங்கம் வகித்திருக்கும் காங்கிரஸ் கட்சியின் அமைச்சர்களான திரு. விஸ்வநாதன்,திரு.ராஜேஷ்குமார் ஆகியோர் இதற்கு தகுந்த விளக்கம் அளிக்க வேண்டும்.

ச.பென்னிகுயிக் பாலசிங்கம் ஒருங்கிணைப்பாளர்



தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக சே.ரா. நவீன் பாண்டியன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் (29.06.2026) பொறுப்பேற்றுக்கொண்டார்

லவ்லி ப்ரோபோஷனல் யுனிவர்சிட்டி சார்பாக கோவையில் நடைபெற்ற

# வாழ்நாளை முழுமைக்கும் ஒரு நாள் உத்வேகம் எனும் தலைப்பிலான கருத்தரங்கம்

## கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்




கடந்த 2002 ம் ஆண்டு பஞ்சாப்பில் துவங்கபட்ட லவ்லி ப்ரோபோஷனல் யுனிவர்சிட்டி பல்கலைக்கழகத்தில், சுமார் 32,000, மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இந்த நிலையில் 2026 ம் கல்வியாண்டுக்கானசேர்க்கை இந்தியா முழுவதும் நடைபெற்றது. இதில் தமிழகத்தில் இருந்து மட்டும் சுமார் 800 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் புதிய, புதிய துறைகளை தேர்வு செய்து சேர்ந்துள்ளனர். இதில் பல்வேறு தேர்வுகளை எதிர் கொண்டு நல்ல மதிப்பெண்களை பெற்ற மாணவ மாணவர்களுக்கான கல்வி ஸ்காலர்ஷிப் வழங்கும் விழா, மற்றும் மாணவ மாணவியர்களின் பெற்றோர்களுக்கு ஏற்படும் பல்வேறு சந்தேகங்கள், கேள்விகளை புரியவைக்கும் வகையில்,கோவை பந்தயசாலையில் உள்ள தனியார் உணவக அரங்கில், இப்பல்கலைகழகம் சார்பாக, வாழ்நாளை முழுமைக்கும் ஒரு நாள் உத்வேகம் எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய பேராசிரியர் லலித் பல்லா, டாக்டர் விஷால் ஷர்மா, மற்றும் டாக்டர் நித்தின் பரத்வாஜ் ஆகியோர் கூறியதாவது..

கோவையில் நடைபெற்ற இந்த ஒருநாள் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக கோவை, ஈரோடு, திருப்பூர்,நாமக்கல்,உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறுபகுதிகளைசேர்ந்த மாணவர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள், தொழில்நுட்பம் உடைய கல்வி, மாணவர் திறன் மேம்பாட்டு திட்டங்கள், வேலை வாய்ப்பு, சர்வதேச கல்வி அனுபவம், மற்றும் கல்வி உதவித் தொகைகள் குறித்து முழுமையான தகவல்களை வழங்குவதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக அமைந்தது என்று தெரிவித்தனர். மேலும் இந்த நிகழ்ச்சிக்கு டாக்டர் சாமி ஆனந்த் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்கள், மற்றும் பெற்றோர்களுடன் நேரடியாக கலந்துரையாடி கல்வி சேர்க்கை உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியில்பல்கலைக்கழகத்தின் கல்வி தரம், தொழில்துறை உடன் இணைந்தபாடத்திட்டங்கள், பயிற்சி பணிகள், வேலைவாய்ப்பு வசதிகள், திறன் மேம்பாட்டு திட்டங்கள், தொழில் முனைவோர் ஊக்குவிப்பு, உலகளாவிய கல்வி வாய்ப்புகள், மற்றும் புதுமையான கற்பித்தல் முறைகள், குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது,மாணவர் மைய கல்வி சூழல் குறித்தும் விளக்கங்கள் வழங்கப்பட்டது என்றனர். நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாககல்வியில், சிறந்துவிளங்கிய மாணவர்கள், விளையாட்டு மற்றும் கலைத்துறைகளில் சாதனை படைத்தவர்கள், தேசிய அளவிலான போட்டிகளில் சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் வழங்கப்பட்டது. இதில் 100 சதவிகிதம் முழுமையான ஸ்காலர்ஷிப் பெற்ற மாணவர்களும் பங்கேற்றனர். இந்த முயற்சி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடைய பெரும் வரவேற்பு பெற்றதாக தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் லவ்லி ப்ரொபஷனல் பல்கலைக்கழகத் துணை இயக்குனர் சஞ்சீவ், துணை இயக்குனர் ஜிதேந்திர குமார் தீட்சித், சரவணகுமார், குமரேஷ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதாக தெரிவித்தனர்.

ஏழை எளிய மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிகிச்சை அளிக்கும் வகையில்

# அதிநவீன மருத்துவகுழுவினருடன் இணைந்து, கோவை சிங்காநல்லூர் அடுத்த வசந்த் நகரில், ரியல் கேஜி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனையின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை சிங்கா நல்லூர் அடுத்த வசந்த் நகரில், ரியல் கேஜி மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனையின் துவக்கவிழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த மருத்துவமனை துவக்கவிழாநிகழ்ச்சியில்சிறப்பு விருந்தினராக, ராகவேந்திர் மருத்துவமனையின் நிறுவனரும், சித்திரை செவிலியர் கல்லூரி மற்றும் மதுரை ஈவ் சீட் அறக்கட்டளையின் தலைவருமான டாக்டர் எம் முருகன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார், தொடர்ச்சியாக இந்திய மெடிக்கல் அசோசியேசன் தமிழ் நாடுகிளை நியமன தலைவர் டாக்டர் ஏ.கே. ரவிக்குமார், இந்தியன் மெடிக்கல் அசோசியேசன் தமிழ்நாடு கிளை முன்னாள் செயலாளர் டாக்டர் கார்த்திக் பிரபு, இந்தியன் மெடிக்கல் அசோசி யேஷன் கோவையின், நிதி செயலாளர் டாக்டர் பாலமுருகன், மற்றும் கோவை நீரிழிவு சிறப்பு மைய நிர்வாக இயக்குநர் விஜயலட்சுமி பாலமுருகன் பாரத ஸ்டேட் வங்கியின் கிளை தலைவர் ஆறுமுகம், ஆகியோர் குத்து விளக்கேற்றி வைத்து துவக்கி வைத்தார். மேலும் மருத்துவமனையில் உள்ள சிறப்பம்சங்கள், வார்டுகள், அறுவை சிகிச்சை அறை, ஐசியூ, அறுவை சிகிச்சைக்கு பின் பராமரிப்பு அறை, நோயாளிகள் அறை, என அனைத்து கட்டமைப்புகளும்மருத்துவமனையில் எவ்வாறு செயல்படுத்த பட்டுள்ளது என்பதை நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய டாக்டர் எம் முருகன் கூறியதாவது.. நாளுக்கு நாள் மருத்துவமனையின் தேவைகள் மக்களுக்கு அதிகரித்து வருகின்றன. புதிய புதிய நோய் தொற்றுக்கள், புதிய புதிய சிகிச்சை முறைகள் என மருத்துவத்துறை வளர்ச்சி அடைந்து வருகின்றது. அத்தகைய வளர்ச்சிக்கு ஏற்ப இங்கு துவங்கப்பட்டுள்ள புதிய ரியல் கேஜி மருத்துவமனையில் நிறுவ பட்டுள்ளது. மேலும் சிறப்பம்சமாக ஏழை எளிய மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிகிச்சை அளிக்கும் நோக்கத்தில் இந்த மருத்துவமனையை துவக்கியுள்ளனர் எந்தவிதலாபநோக்கமும் இல்லாமல், நோயாளிகளுக்கு சிகிச்சைஅளிக்கவேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்து இம்மருத்துவமனையை துவங்கியுள்ளனர் அதற்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் இறுதியாக விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றிகளை, மருத்துவமனையின் இயக்குனர் லதா கஜேந்திரன் தெரிவித்தார் என்பது குறிப்பிட த்தக்கது.

# விசிக புதிய மாவட்ட துணைச்செயலாளர் என்.எஸ்.பெரியசாமிக்கு என்.நாரையூரில் பாராட்டு விழா



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் விருத்தாசலம் தொகுதி மாவட்ட துணைச் செயலாளராக,மாவட்டச் செயலாளர் வீர. திராவிடமணி அவர்களின் பரிந்துரையின் பேரில், கட்சியின் தலைவரும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், என். நாரையூரைச் சேர்ந்த என்.எஸ். பெரியசாமியை அண்மையில் நியமனம் செய்தார். புதிய பொறுப்பேற்ற அவருக்கு, என்.நாரையூர் கிராமத்தில் கட்சியின் சார்பில் சிறப்பான பாராட்டு விழா நடைபெற்றது.

இவ்விழாவினை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முன்னணி நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் இணைந்து மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.விழாவில், புதிய மாவட்ட துணைச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள என்.எஸ்.பெரியசாமிக்கு சால்வை அணிவித்தும், இனிப்புகள் வழங்கியும்சிறப்பிக்கப்பட்டது. மேலும், மேளதாளங்கள் முழங்க, பட்டாசுகள் வெடித்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட அவருக்கு, கட்சித் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்துத் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இப்பாராட்டு விழாவில் கட்சியின் முக்கிய நிர்வாகிகளான கலைவாணன், என்.ஆர்.டி. மணிகண்டன், வேல்முருகன், என்.எஸ். ரமேஷ், பாலமுருகன், ஆட்டோ மூர்த்தி, சவரிமுத்து, சுந்தர்மூர்த்தி, சதீஷ், ராகுல், பூபாலன், கருணாஸ், அஜய், ராஜாமணி, கஜினி, குமரேசன், காளிதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.மேலும்,இந்நிகழ்வில் மகளிர் அணி நிர்வாகிகளான துர்கா தேவி, கண்ணகி, பழனியம்மாள், சகுந்தலா, அம்சவல்லி, சோலையம்மாள், சபிதா, அஞ்சலை, செந்தமிழ்ச்செல்வி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று, புதிய துணைச் செயலாளருக்குத் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தனர்.



த.வெ.க.சார்பில் பெரியநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் சார்பில்

# 2000க்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவு மற்றும் நலத்திட்டங்கள் வழங்கினர்

கோவை மாநகர் மாவட்டம் கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதி பெரியநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் சார்பில் தமிழக முதல்வர் சி ஜோசப் விஜய்யின் 52 வது பிறந்தநாளை ஒட்டி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், கல்வி உதவித் தொகை, மருத்துவ முகாம் மற்றும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவு வழங்கபட்டது.

தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் 52 வது பிறந்தநாளை ஒட்டி தமிழக வெற்றிக் கழகத்தினர் பல்வேறு இடங்களில் நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக பெரியநாயக்கன்பாளையம் மத்திய ஒன்றியம் சார்பில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் 52 வது பிறந்தநாள் விழா தொப்பம்பட்டி பிரிவு வேணுகானம் திருமண மண்டபத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகளுடன் விமர்சையாக கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், கோவை மாநகர் மாவட்ட செயலாளர், வி சம்பத்குமார் மற்றும் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் கனிமொழி சந்தோஷ் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு அரிசி மற்றும் மளிகை பொருட்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீல் சேர் உள்ளிட்ட நலத்திட்டங்களை வழங்கினர். மேலும் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையினையும் வழங்கினர்.

தொடர்ந்து 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு மதிய உணவு வழங்கினர். மேலும் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், மகளிர்அணியினர்,தொண்டர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் தமிழகத்தில் உள்ள அனைத்து முதியோர் இல்லத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருபவரும், இந்நிகழ்ச்சியில் பத்துக்கும் மேற்பட்ட மாற்று திறனாளி களுக்கான சக்கர நாற்காளிகளை வழங்கியவருமான தமிழக வெற்றி கழகத்தின் நிர்வாகி தினேசின் காரில் தமிழக வெற்றி கழகத்தின் கொடியினை அமைச்சர் சம்பத்குமார் பொருத்தினார். மேலும் இவர் பெற்றுள்ள விருதுகளை பெற்ற அமைச்சர் மேடையில் தானும் வழங்குவதாக முன்மொழிந்து அதனை வழங்கினார்.

# கோவையில், உர விநியோகம் தொடர்பான கூட்ஸ் ரயில் வேகன் ஒதுக்கீட்டில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தையில் சுமூக தீர்வு எட்டியுள்ளது



இந்தியாவில் மத்திய அரசின் மானிய விலையில் யூரியா மற்றும் mop டி.ஏ.பி உள்ளிட்ட உரங்களை உற்பத்தி ஆலைகளில் இருந்து விநியோக மையங்களுக்குக் கொண்டு செல்ல ரயில்வே வேகன்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன..

இந்நிலையில் தென்னக ரயில்வே கூட்ஸெட்டில் இந்த வேகன்கள் ஒதுக்கீட்டில், கோவையில் செயல்படும் வடகோவை கூட்ஸெட்டில் பல்வேறு இடையூறுகள் நடப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நலையில் இது தொடர்பாக,

உர நிறுவனங்களின் க்ளியரிங்காண்ட்ராக்டுகளை பெற்ற சக்தி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் பாண்டியன், உர விற்பனை மற்றும் வடகோவை கூட்ஸெட் வேகன் ஒதுக்கீட்டில் நடைபெற்று வருவதாகக் கூறப்படும் இடையூறுகள் குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை விடுத்துள்ளார்..

இது தொடர்பாக அவர் அளித்துள்ள மனுவில் பல்வேறு உர நிறுவனங்களின் வேகன்கள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மட்டுமே செய்ய வேண்டும் என்ற விதிமுறை இருப்பதாக தெரிவித்தார். இந்நிலையில் வடகோவை இரயில் நிலையத்தில், வேகன் ஒதுக்கீடு, சரக்கு விநியோகம் மற்றும் டெண்டர் எடுத்த வர்களை தடுத்து நிறுத்திய நிலையில்,சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், இரு தரப்பினரிடையே நடத்திய பேச்சு வார்த்தையில் சமூக உடன்பாடு ஏற்பட்டு,சக்தி இண்டஸ்ட்ரியல் நிறுவனத்திற்கு முழு அதிகாரம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

முதலமைச்சர் விஜய்யின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு

# தென்காசி மாவட்டம் சுரண்டையில் தவெக சார்பில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமினை மூத்த நிர்வாகி என்டிஎஸ் சார்லஸ் துவக்கி வைத்தார்

தென்காசி மாவட்டம் சுரண்டையில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் நடந்தது.

முகாமிற்கு தவெக மூத்த நிர்வாகி பரன்குன்றாபுரம் என்டிஎஸ் சார்லஸ் தலைமை வகித்து துவக்கி வைத்தார் நகர செயலாளர்கள் பி. கணேசன், அரவிந்த் முன்னிலை வகித்தனர் ஆலங்குளம் வடக்கு ஒன்றிய ஒன்றிய செயலாளர் எம்பிவி கதிர்வேல் வரவேற்றார்,

மாவட்ட மக்களிரணி அமைப்பாளர் சரஸ்வதி, இணை அமைப்பாளர் காளியம்மாள், இளைஞரணி சுதன், தியாகராஜன், அழகையா, வழக்கறிஞர் வெங்கடேஷ் பாபு, தலைமை கழக பேச்சாளர் பாலமுருகன், ஒன்றிய இணை செயலாளர் லூர்து சாமி (ஏ) விஜி, பொருளாளர் ஜான்சன் ரமேஷ்,மற்றும் நிர்வாகிகள் சிவா, சிவபெருமாள், கிருஷ்ணமூர்த்தி, மாதவன், காளிதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் முகாமில்



அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவ குழுவினர் 225 பேர்களுக்கு பரிசோதனை செய்தனர் 65 பேர் அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர்

முன்னதாக முதலமைச்சர் ஜோசப் விஜய்யின் பிறந்த நாள் அன்று மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் 520 பேர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது குறிப்பிட த்தக்கது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சிறுசேமிப்புத் துறையின் சார்பில் "உலக சிக்கன நாள்" கொண்டாட்டங்களை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டி, கட்டுரைப்போட்டி, சொற்றொடர்கள் போட்டி, பேச்சுப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் பரிசுகளை மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் நேற்று (29.06.2026) வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு ) விஜய்ராஜ்குமார் உள்ளார்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் நேற்று (29.06.2026) கேட்டறிந்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சிறுசேமிப்புத் துறையின் சார்பில் "உலக சிக்கன நாள்" கொண்டாட்டங்களை முன்னிட்டு நடத்தப்பட்ட கவிதைப் போட்டி, கட்டுரைப்போட்டி, சொற்றொடர்கள் போட்டி, பேச்சுப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் பரிசுகளை மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் நேற்று (29.06.2026) வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) விஜய்ராஜ்குமார் உள்ளார்.



ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகளை நேற்று (29.06.2026) கேட்டறிந்தார்.

## ஜெயலலிதா போல என்எல்சி பங்குகளை தவெக அரசே வாங்க வேண்டும்; எடப்பாடி பழனிசாமி கோரிக்கை



சென்னை: என்எல்சி பங்குகளை மத்திய அரசு தனியாருக்கு விற்பதைத் தடுக்க உடனடி நடவடிக்கைகளை தவெக அரசின் முதல்வர் எடுக்கவேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,"கடலூர் மாவட்டம், நெய்வேலியில் செயல்பட்டு வரும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் எனப்படும் என்எல்சி நிறுவனம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் முக்கியமான பொதுத் துறை நிறுவனமாகும்.

நவரத்தினா அந்தஸ்து பெற்றுள்ள இந்நிறுவனம் தனது சிறப்பான செயல்பாடுகளின் மூலம் நடப்பாண்டில் 3,769 கோடி ரூபாயை லாபமாக ஈட்டி உள்ளது. இப்படி லாபகரமாக இயங்கி வரும் என்எல்சி நிறுவனத்தின் மூன்று சதவீத பங்குகளை, பங்குச் சந்தை மூலம் தனியாருக்கு விற்பனை செய்ய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

2006ம் ஆண்டு என்எல்சி நிறுவனத்தின் 10 சதவீத பங்குகளை விற்பனை செய்ய அப்போதைய மத்திய காங்கிரஸ் அரசு முயற்சித்தபோது, அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள், நலச் சங்கங்கள், அதிகாரிகள் சங்கங்கள் ஒன்றிணைந்து போராட்டங்களி ல் ஈடுபட்டன. அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா என்எல்சி பங்குகளை விற்பனை செய்ய,காங்கிரஸ்-திமுக கூட்டணி அரசு முயன்றால், நானே களத்திற்கு வந்து எனது தலைமையில் பங்கு விற்பனைக்கு எதிராகப் போராட்டம் நடத்துவேன்" என்று எச்சரித்ததன் விளைவாக, அந்தப் பங்கு விற்பனையை அப்போதைய மத்திய காங்கிரஸ் அரசு முழுமையாகக் கைவிட்டது. தொடர்ந்து, 2013ம் ஆண்டு எஸ்இபிஐ விதிமுறைகளைக் காரணம் காட்டி அப்போதைய மத்திய காங்கிரஸ் அரசு 5 சதவிகித பங்குகளை விற்பனை செய்ய முயற்சித்த போது, ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசு, கடும் நிதி நெருக்கடிக்கு இடையில், 500 கோடி ரூபாய் மதிப்பிலான சுமார் 3.56 % என்எல்சி பங்குகளை தமிழக அரசின் பொதுத்துறை நிறுவன ங்கள் மூலம் வாங்கி, என்எல்சி நிறுவனத்தை தனியார் மயமாக்கும் மத்திய காங்கிரஸ் அரசின் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

இந்நிலையில் மீண்டும் தற்போது மத்திய அரசு என்எல்சி நிறுவனத்தின் மூன்று சதவீத பங்குகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழ்நாட்டில் என்எல்சி நிறுவனம் அமைக்கப்படும்போது, ஏறக்குறைய 23 கிராமங்களில் விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன. அரசுதான் நிறுவனத்தை நடத்தும் என்ற நம்பிக்கையோடு அப்பகுதி மக்கள் தாமாகவே முன்வந்து தங்களது நிலங்களை வழங்கினார்கள். அவர்களது நம்பிக்கையை நிலை நிறுத்தும் வகையில், என்எல்சி நிறுவனத்தை தொடர்ந்து அரசுடைமை நிறுவனமாகவே நடைபெறுவதை, அதிமுக உறுதி செய்யும் என்பதை இத்தருணத்தில் மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன்.

மத்திய அரசு என்எல்சி நிறுவனத்தை தனியார்மயமாக்கும் போக்கினை கைவிடவேண்டும்என்று வலியுறுத்துகிறேன். கடந்த காலங்களில் என்எல்சி பங்கு விற்பனைக்கு எதிரான, உறுதியான நிலைப்பாட்டை எடுத்து அதனைத் தடுத்து நிறுத்திய அதிமுக தற்போதும் என்எல்சி நிறுவன பங்கு விற்பனையை தடுத்து நிறுத்தப் போராடும்.மத்திய அரசின் கொள்கை முடிவை எதிர்த்துப் போராடும் என்எல்சி ஊழியர் சங்கங்கள், அதிகாரிகள் சங்கம், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும், அதிமுக முழு ஆதரவை வழங்கும்.

## சிபிஎஸ்இ 7, 8, 9ம் வகுப்புக்கான மும்மொழித் திட்ட விதிகளில் தளர்வு




புதுடெல்லி: தற்போது 7, 8, 9 -ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள், 10-ம் வகுப்பை அடையும்போது மூன்றாவது மொழிக்கு தேர்வு எழுத வேண்டிய அவசியமில்லை என்று மத்திய இடைநிலை கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சிபிஎஸ்இ வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பு: தற்போது 10-ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் புதிய மும்மொழித் திட்டத்தை பின்பற்ற வேண்டியதில்லை. மேலும், தற்போது 7, 8, 9-ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் 10-ம் வகுப்பை அடையும்போது மூன்றாவது மொழிக்குத்தேர்வுஎழுத வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே இரண்டு வெளிநாட்டு மொழிகளைப் பயிலும் 7, 8, 9-ம் வகுப்பு மாணவர்கள் அதே மொழிகளைத் தொடரலாம். அதே நேரத்தில் அவர்கள் கூடுதலாக ஓர் இந்திய மொழியைக் கற்க அனுமதிக்கப்படுவார்கள்.

வகுப்புக்கு ஏற்ற பாட புத்தகங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கை 2020-ன்படி 2026-27-ம் கல்வியாண்டு முதல் 6-ம் வ குப்பில் இருந்து மும்மொழி திட்டம் அறிமுகம் செய்யப்படும் என சிபிஎஸ்இ கடந்த ஏப்ரல் மா தம் அறிவித்தது. மூன்று மொழிகளில் இ ரண்டு மொழிகள் இந்திய மொழிகளாக இருக்க வேண்டும் என்று ம் அது கூறியது. மேலும், ஒரு பள்ளி 6-ம் வகுப்பில் எந்த 3-வது மொழியை அறிமுகம் செய் கிறதோ, அதே மொழிதான் அந்த பள்ளிக்கான 9, 10-ம் வகுப்புகளில் விருப்பப் பாடமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த மே 15-ம் தேதி வெளியிட்ட புதிய அறிவிப்பில், 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூலை 1 முதல் மும்மொழி திட்டத்தை கட்டாயமாக்குமாறு அனைத்து பள்ளிகளுக்கும் சிபிஎஸ்இ அறிவுறுத்தியது. சிபிஎஸ்இ-யின் இந்த திடீர் அறிவிப்பு, மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனையடுத்து, சிபிஎஸ்இ புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, 9-ம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் மூன்று மொழிகளைக் கற்க வேண்டும். அவற்றில் குறைந்தது இரண்டு இந்தியமொழிகள் இருக்க வேண்டும். ஏற்கெனவே, இரண்டு வெளிநாட்டு மொழிகளைப்பயிலும்மாணவர்கள் மூன்றாவது மொழியாக ஓர் இந்திய மொழியைச் சேர்த்துக்கொள்ளலாம்.

கூடுதல் மொழிக்கு பள்ளி அளவிலான உள் மதிப்பீட்டு நடைமுறை மட்டுமே பின்பற்றப்படும். இவர்கள் 10-ம் வகுப்புக்குச் செல்லும்போது மூன்றாவது மொழிக்கு தேர்வு இருக்காது. இதேபோல், தற்போது 7 மற்றும் 8-ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கும் இதேஇடைக்காலதளர்வு நீட்டிக்கப்பட்டு உள்ளது.

# How Iran's attacks on lone American naval base in West Asia made US 'rethink footprint' in region

*The United States is reviewing its military presence in West Asia after Iranian missile and drone strikes caused far greater damage than previously revealed at more than 20 American sites, including the US Navy's base in Bahrain, according to a report.*

*Notably, Bahrain has been repeatedly targeted by Iranian missile and drone attacks during the conflict in West Asia.*

*On Sunday, Iran fired missiles and drones at US military facilities in Bahrain and Kuwait shortly after the US military said it had carried out strikes in Iran, accusing Tehran of attacking a tanker in the Strait of Hormuz despite a peace agreement being in effect.*

*Iran 'extensively damaged' only US naval base in West Asia: Report*

*From late February until June, Iran launched repeated attacks on Naval Support Activity Bahrain (NSA Bahrain), the lone American naval base in West Asia.*

*The strikes that broke through defences caused major damage that the Pentagon has not publicly confirmed, according to a Wall Street Journal investigation based on satellite images, videos shared on social media and interviews with current and former service members.*

*The military said there were no deaths at the base and that its operations were not seriously disrupted. Most personnel were evacuated, although a small number have remained at the site.*

*US 're-evaluating footprint' in West Asia*



*The heavy damage at the naval base in Bahrain, together with strikes on at least 20 US sites across the region, including military bases and diplomatic buildings, has reportedly pushed Washington to reassess its overall presence in West Asia, officials familiar with the discussions told the WSJ.*

*The military is looking at redesigning the Bahrain base, cutting back its presence in Kuwait and Saudi Arabia, and relocating some bases or military functions farther west, beyond the range of Iranian missiles and drones, as per the report.*

*Some of the damaged buildings may not be rebuilt. Command-and-control facilities could be shifted underground, while military assets may also be dispersed across more locations in the region. However, officials said no final decisions have been taken.*

*Israel is among the places being considered for future basing, two officials told the publication. During the conflict, the country hosted dozens of US aircraft, including fighter jets and aerial refuelling planes.*

*Rebuilding could cost Pentagon up to $400 million*

*Last month, Pentagon Comptroller Jay Hurst told Congress that the department's estimated war cost of $29 billion did not include damage to US military bases.*

*The WSJ estimated that rebuilding structures similar to those damaged at NSA Bahrain would cost about $400 million, as per a publicly available defense department cost model and procurement records.*

*This estimate only covers construction costs. It does not include additional expenses that could arise if rebuilding takes place, such as clearing debris or strengthening the new structures.*

*The estimates cover only construction and do not include other costs that could factor into the total if the buildings were to be rebuilt, such as debris removal and reinforcement.*

*A report released on Tuesday by the Center for Strategic and International Studies (CSIS) put the total cost of the war at roughly $40 billion. That figure includes an estimate of between $2.2 billion and $5.1 billion in damage to US bases across the region, based on buildings the think tank identified as having been hit.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.